**N THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.301/2022 | Village | : | |
| Prosecution witness | : | PW -6 | Taluk | : | |
| Name | : | யோகேஷ் | Occupation | : | |
| Father Name | : | ரவிசந்திரன் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 25.04.2025**

**Accused A1, A2 present.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

நான் வீரமான்குடி புதுத்தெருவில் குடியிருந்து பேவர் ப்ளாக் வேலை செய்கிறேன். 20.04.2022 ஆம் தேதி இரவு 9.30 மணியளவில் சுண்டகுடியில் வேலை பார்த்து விட்டு வீரமான்குடிக்கு வந்துகொண்டிருந்தபோது பிச்சை என்பவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். பட்டுகுடி பாலத்திற்கு அருகில் போலிஸார் வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயாரித்தார்கள். அதில் நானும், சிவராஜ்ம் சாட்சியாக கையெழுத்துபோட்டோம். 20.04.2022 தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த பார்வைமகசர் அ.தா. ஆ.2. போலிஸார் சம்பவ இடத்திலிருந்து இரவு 11 மணிக்கு இரத்தம் தோய்ந்த மண், இரத்தம் தோயாத மண் ஆகியவற்றை மகசரில் கைபற்றினார்கள். அதில் நானும், சிவராஜ்ம் சாட்சி கையொப்பம் இட்டோம். 20.04.2022 தேதியிட்ட கைபற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கைபற்றுதல்மகசர் அ.தா. ஆ.3. இரத்தம் தோய்ந்த மண் சா.பொ.2, இரத்தம் தோயாத மண் சா.பொ.3. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

பட்டுகுடி பாலத்திலேயே தான் போலிஸார் வரைபடம் வரைந்து மகசர்கள் தயார் செய்து அந்த இடத்திலேயே எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- G. சுந்தரராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.